Sunnybrook
HEALTH SCIENCES CENTRE

Sunnybrook Health Sciences Centre
2075 Bayview Avenue,
Toronto, ON Canada M4N 3M5
t: 416.480.6100
www.sunnybrook.ca

# IMPORTANT INFORMATION FOR PATIENTS AND FAMILIES

# நோயாளிகள் மற்றும் குடும்பத்தினருக்கான முக்கிய தகவல்கள்

# Personal Health Information Protection Act

# தனி நபருக்குரிய உடல்நல தகவற் பாதுகாப்புச் சட்டம்

## Personal Health Information Protection Act

## தனி நபருக்குரிய உடல்நல தகவற் பாதுகாப்புச் சட்டம்

The Ontario Government has legislation, the Personal Health Information Protection Act (PHIPA) that came into effect on November 1, 2004. This act has been established to set out rules for the collection and utilization of information that is collected about patients. This document is intended to provide you with information on the new Personal Health Information Protection Act.

ஒன்டாரியோ அரசாங்கம், நவம்பர் 1, 2004 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட, தனி நபருக்குரிய உடல்நல தகவற் பாதுகாப்புச் சட்ட(PHIPA)த்தை இயற்றியுள்ளது. இந்தச் சட்டம் நோயாளிகளைப் பற்றிச் சேகரிக்கப்பட்ட தகவல்களை, சேகரிப்பதற்கும் உபயோகிப்பதற்கும் விதிமுறைகளை அமைப்பதற்காக நிறுவப்பட்டது. புதிய தனி நபருக்குரிய உடல்நலத் தகவற் பாதுகாப்புச் சட்டம் பற்றிய தகவல்களை உங்களுக்குக் கொடுப்பதே இந்த ஆவணத்தின் நோக்கமாகும்.

## Collection of Personal Information

## தனி நபரின் தகவல்களின் சேகரிப்பு

We collect personal health information about you. We collect this information either from you directly or from the person acting on your behalf. The information that we collect may include your name, date of birth, address, health history, records of your visits and the care that you received. Occasionally, when we have received your consent, we receive and collect information about you from other sources.

உங்களின் உடல்நலத் தகவல்களை நாங்கள் சேகரிக்கிறோம். இதை நாங்கள் உங்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது உங்களுக்காக செயற்படும் நபரிடமிருந்தோ சேகரிக்கிறோம். நாங்கள் சேகரிக்கும் இந்தத் தகவல்கள் உங்களுடைய பெயர், பிறந்த திகதி, விலாசம், உடல்நல வரலாறு, உங்கள் சந்திப்புக்களின் பதிவுகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட பராமரிப்பு என்பனவற்றை உட்படுத்தக்கூடும். சில வேளைகளில், உங்கள் சம்மதத்தைப் பெற்றவுடன், உங்களைப்பற்றிய தகவல்களை வேறு ஊற்றுமூலங்களிலுமிருந்து பெற்றுக்கொள்வோம் மற்றும் சேகரிப்போம்.

**Use and Disclosure of Personal Health Information**

**தனி நபருக்குரிய உடல்நல தகவல்களை உபயோகித்தல் மற்றும் வெளிப்படுத்துதல்**

We use and disclose your personal health information as follows:

உங்கள் தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களை பின்வருவனவற்றிற்காக நாங்கள் உபயோகிப்போம் மற்றும் வெளிப்படுத்துவோம்:

- To treat and care for you.

  உங்களுக்கு சிகிச்சை செய்ய மற்றும் பராமரிப்பதற்கு

- To get payment for your treatment and care (from OHIP, WSIB, your private insurer or others).

  உங்கள் சிகிச்சைக்கு மற்றும் பராமரிப்புக்குப் பணம் பெறுவதற்காக (OHIP, WSIB, உங்கள் தனி நபர் காப்புறுதியாளர் அல்லது மற்றவர்களிடமிருந்து)

- To conduct risk management activities.

  ஆபத்தான நிர்வாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு

- To conduct quality improvement activities, such as completing surveys.

  ஆய்வுகளைச் செய்து முடித்தல் போன்ற, தராதர முன்னேற்ற நடவடிக்கைகளை நடந்துவதற்கு

- For teaching purposes.

  கற்பிக்கும் நோக்கத்துக்காக

- To conduct research.

  ஆராய்ச்சிகளைச் செய்வதற்காக

- To compile statistics.

  புள்ளிவிபரங்களைத் தொகுப்பதற்காக

- For fundraising to improve our programs and services.

  எங்கள் திட்டங்கள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவிப்பதற்காக நிதி திரட்டுவதற்கு

- To comply with legal and regulatory requirements.

  சட்டப்பூர்வமான மற்றும் ஒழுங்குமுறை சீர்படுத்தும் தேவைகளுடன் இணங்குவதற்காக

- To fulfill other purposes permitted or required by law.

  சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படும் வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக

**It's Your Choice**

**இது உங்கள் தெரிவு**

With regard to the above uses and disclosures of your personal health records, you have a choice. You may access and correct your personal health records, or withdraw your consent for some of the above (subject to certain legal exceptions). To do this, please contact us as outlined below.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களை உபயோகித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமாக உங்களுக்கு ஒரு தெரிவு இருக்கிறது. உங்கள் தனிநபருக்குரிய மருத்துவப் பதிவுகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் திருத்திக்கொள்ளலாம், அல்லது மேற்குறிப்பிட்ட சிலவற்றிற்கான (குறிப்பிட்ட சில சட்டப்பூர்வமான விதிவிலக்குகளுக்குட்பட்டு) உங்கள் சம்மதத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இதைச் செய்வதற்கு, கீழே குறிப்பிட்டுள்ள குறிப்புகளின்படி எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**Our Pledge to Protect Your Personal Health Information**

**தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களை பாதுகாப்பது பற்றிய எங்கள் உறுதிமொழி**

The following are a list of pledges to you that we have made to protect your personal health information:

தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களைப் பாதுகாப்பதற்காக பின்வரும் உறுதிமொழிகளின் பட்டியலை உங்களுக்குக்காகச் செய்துள்ளோம்:

- We will take steps to protect your personal health information from theft, loss and unauthorized access, copying, modification, use, disclosure and disposal.

தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களைத் திருட்டு, தொலைத்தல் மற்றும் அதிகாரப்பூர்வமற்றமுறையில் அடைதல், பிரதியெடுத்தல், மாற்றம் செய்தல், உபயோகித்தல், வெளிப்படுத்துதல் மற்றும் அகற்றிவிடுதல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கத் தேவையான படிகளை எடுப்போம்.

- We will conduct audits and complete investigations to monitor and manage our privacy compliance.

எங்கள் தனிப்பட்ட உடன்பாடுகளை கண்காணிப்பதற்கு மற்றும் சமாளிப்பதற்காகத் கணக்காய்வுகளை நடத்தி விசாரணைகளைப் பூர்த்திசெய்வோம்

- We will take steps to ensure that everyone who performs services for us protects your privacy and only uses your personal health information for the purposes you have consented to.

எங்களுக்குக்காக சேவைகளை நடந்துவேர் ஒவ்வொருவரும் உங்கள் அந்தரங்கங்களை பாதுகாப்பதை  மற்றும் நீங்கள் சம்மதம் தெரிவிக்கும் தேவைகளுக்காக மாத்திரம் தனி நபருக்குரிய உங்கள் உடல்நல தகவல்களைப்  உபயோகிப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளத் தேவையான படிகளை எடுப்போம்.

**Contact Information**

**தொடர்பு கொள்ளவேண்டிய தகவல்கள்**

For more information about our privacy protection practices, or to raise a concern you may have about our practices, please contact:

அந்தரங்கங்களைப் பாதுகாக்கும் பயிற்சிகள், அல்லது எங்கள் பயிற்சிகள் பற்றி உங்களுக்கிருக்கும் கவலையை பற்றிப்பேச, தயவுசெய்து தொடர்புகொள்ளவும்

Jeff Curtis, Chief Privacy Officer
SHSC Privacy Office
2075 Bayview Avenue
Toronto, Ontario M4K 3G9
T: 416.480.6100 ext. 1236 or privacy@sunnybrook.ca

You also have the right to complain to the Information and Privacy Commissioner of Ontario if you think we have violated your rights. The Commissioner can be reached as follows:

நாங்கள், உங்கள் உரிமைகளை மீறிவிட்டோம் என்று நீங்கள் நினைத்தால், ஒன்டாரியோவின் தகவல் மற்றும் அந்தரங்க ஆணையாளரிடம் முறையிடவும் உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆணையாளரை பின்வரும் முகவரியில் நீங்கள் அணுகலாம்:

Dr. Ann Cavoukian
Information and Privacy Commissioner of Ontario
2 Bloor Street East, Suite 1400
Toronto, Ontario M4W 1A8
416-326-3333
commissioner@ipc.on.ca
www.ipc.on.ca

டாக்டர். ஆன் கவோக்கியன்
ஒன்டாரியோவின் தகவல் மற்றும் அந்தரங்க ஆணையாளர்
2 புளோர் ஸ்றீற் ஈஸ்ட், சூவீட் 1400
டொரென்டோ, ஒன்டாரியோ M4W 1A8
416-326-3333
commissioner@ipc.on.ca
www.ipc.on.ca